## வேதாந்த தேசிகன் அருளிச் செய்த
## அடைக்கலப்பத்து

### தனியன்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

---

## வேதாந்த தேசிகன் அருளிச் செய்த
## அடைக்கலப்பத்து

** பத்தி முதலாம் அவற்றில் * பதி எனக்குக் கூடாமல் *
எத்திசையும் உழன்றோடி * இளைத்து விழும் காகம் போல் **
முத்தி தரு நகர் ஏழில் * முக்கியமாம் கச்சி தனில் *
அத்திகிரி அருளாளர்க்கு * அடைக்கலம் நான் புகுந்தேனே 1

சடைமுடியன் சதுமுகன் என்று * இவர் முதலாம் தரம் எல்லாம் *
அடைய வினைப் பயனாகி * அழிந்து விடும் படி கண்டு **
கடிமலராள் பிரியாத * கச்சி நகர் அத்திகிரி *
இடமுடைய அருளாளர் * இணை அடிகள் அடைந்தேனே 2

தந்திரங்கள் வேறின்றித் * தமது வழி அழியாது *
மந்திரங்கள் தம்மாலும் * மற்றும் உள்ள உரையாலும் **
அந்தரம் கண்டு அடி பணிவார் * அனைவர்க்கும் அருள் புரியும் *
சிந்துர வெற்பிறையவனார் * சீலம் அல்லது அறியேனே 3

காகம் இராக்கதன் மன்னர் * காதலி கத்திரபந்து *
நாகம் அரன் அயன் முதலா * நாக நகரார் தமக்கும் **
போகம் உயர் வீடு பெறப் * பொன்னருள் செய்தமை கண்டு *
நாக மலை நாயகனார் * நல்லடிப் போது அடைந்தேனே 4

உகக்கும் அவை உகந்து * உகவா அனைத்தும் ஒழிந்து * உறவு குணம்
மிகத் துணிவு பெற உணர்ந்து * வியன் காவல் என வரித்து **
சகத்தில் ஒரு புகல் இல்லாத் * தவம் அறியேன் மதிட்கச்சி *
நகர்க் கருணை நாதனை * நல் அடைக்கலமாய் அடைந்தேனே 5

அளவுடையார் அடைந்தார்க்கும் * அதன் உரையே கொண்டவர்க்கும் *
வளவுரை தந்தவன் அருளே * மன்னிய மாதவத்தோர்க்கும் **
களவொழிவார் எமர் என்ன * இசைந்தவர்க்கும் காவலராம் *
துளவ முடி அருள் வரதர் * துவக்கில் எனை வைத்தேனே 6

உமது அடிகள் அடைகின்றேன் என்று * ஒருகால் உரைத்தவரை *
அமையும் இனி என்பவர் போல் * அஞ்சல் எனக் கரம் வைத்து **
தமது அனைத்தும் அவர் தமக்கு * வழங்கியும் தாம் மிக விளங்கும் *
அமைவுடைய அருளாளர் * அடி இணையை அடைந்தேனே 7

திண்மை குறையாமைக்கும் * நிறைகைக்கும் தீவினையால் *
உண்மை மறவாமைக்கும் * உள மதியில் உகக்கைக்கும் **
தண்மை கழியாமைக்கும் * தரிக்கைக்கும் தணிகைக்கும் *
வண்மையுடை அருளாளர் * வாசகங்கள் மறவேனே 8

சுருதி நினைவு இவை அறியும் * துணிவுடையார் தூமொழிகள் *
பரிதி மதி ஆசிரியர் * பாசுரம் சேர்ந்து அருக்கணங்கள் **
கருதி ஒரு தெளிவாளால் * கலக்கம் அறுத்து அத்திகிரிப் *
பரிதி மதி நயனமுடைப் * பரமன் அடி பணிந்தேனே 9

** திருமகளும் திருவடிவும் * திருவருளும் தெள்ளறிவும் *
அருமை இலாமையும் உறவும் * அளப்பரிய அடி அரசும் **
கருமம் அழிப்பு அளிப்பு அமைப்பும் * கலக்கம் இலா வகை நின்ற *
அருள் வரதர் நிலை இலக்கில் * அம்பென நான் அமிழ்ந்தேனே 10

** ஆறு பயன் வேறில்லா * அடியவர்கள் அனைவர்க்கும் *
ஆறும் அதன் பயனும் இவை * ஒருகாலும் பலகாலும் **
ஆறு பயன் எனவே கண்டு * அருளாளர் அடி இணை மேல் *
கூறிய நற்குண உரைகள் * இவை பத்தும் கோதிலவே 11

**அடிவரவு:** பத்தி சடை தந்திரம் காகம் உகக்கும் அளவு உமது திண்மை சுருதி திரு ஆறு தம்பரம்

**வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்**

---